**தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

சட்ட வரைஞர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு மீண்டெழு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 100,000 க்கான தேறிய ஒதுக்கீட்டினையும் சேமிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் நூல் நிலையத்திற்காக ரீடர்ஸ் டைஜஸ்ட் சஞ்சிகையை கொள்வனவு செய்வதற்காக இவ் ஒதுக்கீட்டினை ஒதுக்கிக் கொள்ளப்பட்ட போதிலும் கொவிட் 19 தொற்று காரணமாக அக்கொள்வனவினை மேற்கொள்வதற்கு தவறவிட்டதனால் அவ் ஒதுக்கீட்டினை பயன்படுத்தப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மிகக் கவனமாகவும் சிக்கனமாகவும் முன்கூட்டிய புரிந்துணர்வுடனும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடுகள் வகுத்துக் கொள்ளப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றில் பொறுப்புக்களாக உட்படுத்தப்படாத ரூபா 14,790 க்கான பொறுப்புக்கள் 2021 வருடத்தில் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 230-1-1-0-1402- பொறுப்புக்கான தரவேற்றம் upload செய்யப்பட வேண்டிய இறுதி நாள் பின்னேரம் இப்பொறுப்புக்களை உட்படுத்திக் கொண்டு இருக்கும் போது மின்சாரம் தடைப்பட்டதன் காரணமாக இப்பொறுப்பினை தரவேற்றம் செய்ய முடியாது போனதுடன் எதிர்காலத்தில் அது போன்ற குறைபாடுகள் நேராதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>230-1-1-0-1409- நாட்டில் நிலவிய தொற்று நிலமையினால் 2020 திசெம்பர் மாதத்தினுள் இடையிடையே துப்பரவு செய்யும் பணிக்காக ஊழியர்கள் அழைக்கப்பட்டதுடன் அந்த மாதத்திற்கான இன்வொயிஸ் பத்திரம் 2021.01.01 திகதி எங்களிடம் கிடைக்கப் பெற்றது. முழு மாதத்திற்குமான பணியினை பெற்றுக் கொள்ளாமையினால் மாதத்திற்கான தொகையினை கணக்குப் பார்ப்பதற்கு முடியாது போனமை மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களை இடையிடையே பணிக்கு அழைக்கப்பட்டமையினால் அத்தொகையினை 2020 பொறுப்புக்களாக உட்படுத்துவதற்கு இயலாது போய் உள்ளதுடன் எதிர்காலத்தில் அது போன்ற குறைபாடுகள் நேராதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கீடு இல்லாது பணி அல்லது சேவை அல்லது வழங்களுக்கான எந்தவொரு செலவினத்துக்கு அல்லது இணக்கப்பாட்டுக்கு உள்ளாகப்படாததுடன் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவின வருடத்திற்காக வகுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை மீறாது இருக்க வேண்டி இருந்தது. ஆயினும், ஒரு செலவின விடயத்தில் ஒதுக்கீடுகளை விஞ்சி ரூபா 82,000 க்கான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தன. | இப்பொறுப்பு பணிக் குழாமிற்கு பயிற்சியளிக்கும் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆயினும் இது வரையிலும் கொடுக்கப்படாத செலவாகும். | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்களில் திட்டமிடப்பட்ட ரூபா 185 மில்லியன் பெறுமதி வாய்ந்த சட்ட சாசனங்களை ஒன்றிணைத்து மறுசீராக்கலுக்கான திட்டத்தின் காலத்தினை 2018 மே 16 ஆந் திகதிய இலக்கம் அமப/18/0427/731/008 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 2020 திசெம்பர் 30 வரை மாத்திரம் நீடிக்கப்பட்டிருந்தது. திட்டத்தினை இயக்கிக் கொண்டு முன்னெடுத்துச் செல்வதற்கு இடையிடையே பொருத்தமான அதிகாரிகளை நியமிக்கப்பட்ட போதிலும் 2021 பெப்ரவரி வரையிலும் கூட திட்டத்தினை முடிப்பதற்கு இயலாது போய் இருந்தது. | இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட திட்டங்களை முடிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை அடைவதற்கு செயற்பட வேண்டும். |

## 3.2 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒரு நிழல்படப் பிரதி இயந்திரம், 18 UPS, மற்றும் 10 கனணிப் பொறிகள் கொள்வனவு செய்வதற்காக 2020 திசெம்பர் 30 இல் ரூபா 2,189,612 பெறுமதியான காசோலைகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் பொருட்கள் உருப்படியாக பெறப்படாவிடினும், பொருட் பட்டியல் ஏட்டில் உட்படுத்தப்பட்டிருந்தது. நிழற்படப் பிரதி இயந்திரம் 2021 பெப்ரவரி மாதம் 01 திகதி கிடைத்திருந்ததுடன் 18 UPS மற்றும், 10 டெஸ்க்டொப் கணனிகள், 2021 மார்ச் வரையிலும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | நிழற்படப் பிரதி இயந்திரம், 18 UPS , 10 டெக்ஸ்டொப் கனணிகள் திணைக்களத்திற்கு தாமதமாகக் கிடைக்கப் பெற்றதன் காரணம் அரசின் கொள்கைப் படி இறக்குமதியினை கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, துறைமுக ஊழியர்களின் தொடர் வேலைநிறுத்தம், கொரோனா தொற்று பரவலின் காரணமாக துறைமுகத்திலிருந்து பொருட்களை வெளிக் கொணரும் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைதல், ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் சில ஊழியர்கள் கொரோனா தொற்றினால் அந்நிறுவனத்தினை சில தினங்கள் மூடி வைக்கப்பட்டமை ஆகியன ஆகும். மார்ச் மாதம் முடியும் முன்னர் சகல பொருட்களும் இத்திணைக்களத்துடன் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதன் பின்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு காசோலைகள் பொறுப்படைக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் படி முன் கூட்டி உத்தரவிடப்பட்ட பொருட்கள் முறையாக களஞ்சிய சாலைக்கு வந்து சேர்ந்த பின்பு பொருட் பட்டியல் ஏட்டில் உட்படுத்தப்பட்டு சம்பந்த கொடுப்பனவினை காசோலை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 வருடம் முதல் 2019 வருடம் வரையில் நிகழ்ந்துள்ள 37 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். ஆயினும் 2020 வருடம் முதல் நிகழும் வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(03) மற்றும் 104(04) பிரகாரம் செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் தற்போது அது தொடர்பாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | வாகன விபத்துக் களுக்கான சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 148 ஆக இருப்பினும் சிரேஷ்ட தரத்திலான 16, மூன்றாம் தரத்திலான 17, இரண்டாந் தரத்திலான 15 மற்றும் ஆரம்ப தரத்திலான 03 ஆக உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் 51 பேர்களுக்கான வெற்றிடங்க்ள நிலவின. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறான உதவி சட்ட வரைஞர் பதவிகளில் 06 வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு நடைமுறையினை திருத்துவதற்கான தேவைப்பாடு இருப்பதுடன் தற்போது அரச சேவை ஆணைக்குழுவுடன் சேர்ந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஆட்சேர்ப்பு நடைமுறையினை கூடிய விரைவில் திருத்தப்பட்டு அப் பதவிகள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மற்றும் மேற்கொள்ளப் பட்டுள்ள பதவிகள் உட்பட சகல வெற்றிடங்களுக்கு மான தேவைக்கேற்ப உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ சேவை அதிகாரி, மொழி பெயர்ப்பாளர், மற்றும் நிர்வாக அதிகாரி பதவிகளுக்கான வெற்றிடங்களுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தன. | வெற்றிடமாக உள்ள நிர்வாக அதிகாரி தொடர்பாக 2014.11.28 திகதி முதற் கொண்டு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஒன்றிணைக்கப்பட்ட சேவை பணிப்பாளர் அதிபதியினை அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன் 2020.02.05 திகதிமுதல் ஒரு வருட காலத்திற்காக ஒரு பெண் அதிகாரி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். அவ் அதிகாரியின் ஒப்பந்த காலத்தினை நீடிப்பதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நீதி அமைச்சு செயலாளரின் 2020.07.21 திகதிய கடிதம் மூலம், இறுதியாக இவ்வெற்றிடம் தொடர்பாக ஒன்றிணைக்கப்பட்ட சேவைகளுக்கான பணிப்பாளர் அதிபதியினை அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>முகாமைத்துவ சேவை அதிகாரி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக இறுதியாக நீதி அமைச்சின் MOJ/E08/LDD/15/2016 மற்றும் 2020.08.25 திகதிய கடிதத்தின் மூலம் செயலாளர், பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதுடன் மீண்டும் 2020.11.25 திகதிய கடிதம் மூலம் செயலாளர், நீதி அமைச்சிடம் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br>மொழி பெயர்ப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு முன் அது தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறையினை திருத்தப்பட வேண்டியதுடன் தற்போது அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இயன்றளவு நிரந்தர அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு செயற்பட வேண்டியமை. |

4.1.2 மனிதவள அபிவிருத்தித் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொதுப் பிரிவினுள் மனிதவள அபிவிருத்தியினை மேற்கொள்ளல் எனும் தலைப்பில் 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்திக்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பொதுப் பிரிவினுள் மனிதவள அபிவிருத்தியினை மேற்கொள்ளல் எனும் தலைப்பிலான 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை நிறுவனத்தினுள் செயற்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |